# அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை

உயர்கல்விக்கு உதவும் கரங்கள்.

**சமுதாயத்தில் அடிமட்டத்தில் இருப்பவர்கள் உயர்வதற்கான ஒரே கருவி கல்வி**

**ஜனவரி - ஜீன் 2019**

## கல்விக்கோ டாக்டர். கோ. விசுவநாதன், அறக்கட்டளைத் தலைவர்



ஒரு சமுதாயம் முன்னேற வேண்டுமானால் அதற்குக் கல்வி அவசியம். இளைஞர்களின் வாழ்க்கை முன்னேற்றத்திலும், மக்கள் நலனைத் தீர்மானிப்பதிலும், நாட்டில் உயர்கல்வி பயின்றவர்களின் எண்ணிக்கை முக்கிய காரணியாக உள்ளது. பள்ளிக் கல்வியில் இந்தியா முன்னேற்றம் அடைந்திருந்தாலும், குடும்ப வறுமையின் காரணமாக ஏராளமான மாணவர்கள் உயர்கல்வியைத் தொடரமுடியாமல் இருக்கின்றனர். மேல்நிலைப் பள்ளிக் கல்வியை முடித்த அனைத்து மாணவர்களுக்கும் உயர்கல்வி பயில வாய்ப்பு வழங்கவேண்டும் என்னும் சமூகப் பொறுப்புணர்வுடன் கடந்த 2012 ஆம் ஆண்டு **அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை** தொடங்கப்பட்டு வெற்றிகரமாகச் செயல்பட்டு வருகிறது.

## "HEARTS" (**H**igher **E**ducation for **A**ll to **R**ealize **T**ransformation of the **S**ociety) திட்டம்.

இத்திட்டத்தின் மூலம் வேலூர் மாவட்டம் மற்றும் திருவண்ணாமலை மாவட்டத்தில் பழங்குடியின மக்கள் வசிக்கக்கூடிய ஜமுனாமரத்தூர் ஒன்றியத்துக்குட்பட்ட மேல்நிலைப் பள்ளிகளில் +2 முடித்த பொருளாதார வசதியில்லாத 5,147 மாணவர்கள் பல்வேறு உயர்கல்வி நிறுவனங்களில் பொறியியல் மருத்துவம் கலை மற்றும் அறிவியல் உள்ளிட்ட பாடப்பிரிவுகளில் தங்குதடையின்றி படிக்கக் கல்வி உதவித்தொகை வழங்கிவருகிறது. இதுவரை 5 கோடியே 71 இலட்சம் ரூபாய் உயர்கல்வி பயில உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது. இந்த உதவித்தொகை பெற்றவர்களில் 3 இல் 2 பங்கு பெண்கள் என்பது குறிப்பிடதக்கது.

## மேல்நிலைப் பள்ளிகளில் உயர்கல்வி வழிகாட்டி நிகழ்வுகள்

**"HEARTS"** திட்டத்தின் மூலம் உயர்கல்வி தேவை மற்றும் சிறப்பு பற்றிப் பெற்றோர் மற்றும் மேல்நிலைப்பள்ளி மாணவர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறது. 2019 ஜனவரி மற்றும் பிப்ரவரி மாதங்களில் வேலூர் மாவட்டத்தில் 28 அரசு மேல்நிலைப் பள்ளிகளில் (குறிப்பாகப் பின்தங்கிய கிராமப்புறப் பகுதிகளில்) 12 ஆம் வகுப்பு பயிலும் 3,681 மாணவர்களுக்கு உயர்கல்வி விழிப்புணர்வு ஏற்படுத்தியுள்ளது.






## உயர்கல்வி வழிகாட்டி நிகழ்வு

ஆம்பூர் பரீதா நிறுவனமும் அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளையும் இணைந்து 24.01.19 அன்று ஆம்பூரில் மஜ்ஹருல் உலூம் ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் மாணவர்களுக்குக் கல்வி வழிகாட்டி பயிற்சி நடத்தியது.





இதில் ஆம்பூர் மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதியிலிருந்து 11 ஆம் மற்றும் 12 ஆம் வகுப்பு பயிலும் 1,000 க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்துகொண்டனர். மாணவர்களுக்கு உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்புகள் பற்றி விழிப்புணர்வு அளிக்கபட்டது. இதில் 50 க்கும் மேற்பட்ட கல்வி நிறுவனங்களின் கல்விக் கண்காட்சி இடம்பெற்றது.

## ஆளுமை மற்றும் வேலைவாய்ப்புப் பயிற்சி



கல்வி உதவித்தொகை பெற்று உயர்கல்வி பயிலும் மாணவர்கள், பெரும்பாலும் கிராமப்புற மற்றும் முதல் தலைமுறைப் பட்டதாரி மாணவர்கள் என்பதால் அவர்களுக்கு உடல் நலம், ஆளுமைத்திறன் மற்றும் வாழ்க்கைக்குத் தேவையான தன்னம்பிக்கைப் பயிற்சிகளை வழங்கி வருகிறது. கடந்த ஜனவரி, பிப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் அறக்கட்டளையின் கல்வி உதவித்தொகை பெற்று இறுதியாண்டு படிக்கும் 400 மாணவர்களுக்கு வேலைவாய்ப்பு மற்றும் தொழில் முனைவோருக்கான வழிகாட்டுதல் பயிற்சி வழங்கிச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.



---



வாணியம்பாடி இஸ்லாமியா பெண்கள் கல்லூரியின் பயிற்சி மற்றும் வேலைவாய்ப்புத் துறையும் அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளையும் இணைந்து அக்கல்லூரியில் இறுதியாண்டு பயிலும் மாணவிகளுக்கு ஒரு நாள் ஆளுமை மற்றும் வாழ்வியல் திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளித்து சான்றிதழ் வழங்கியது.

## கல்வி உதவித்தொகைக்கு மாணவர்களைத் தேர்வுசெய்தல்







கடந்த ஜனவரி மற்றும் பிப்ரவரி மாதங்களில் 2018-19 கல்வியாண்டிற்கான இரண்டாம் பகுதி கல்வி உதவித்தொகைக்கு விண்ணப்பித்த மாணவர்களுக்கு நேர்முகத்தேர்வு நடத்தப்பட்டது. மேலும் மாணவர்களின் குடும்பப் பொருளாதார நிலைமையை அவர்களின் வீட்டுக்கு நேரடியாகச் சென்று தகவல் சேகரிக்கபட்டுத் தகுதியான மாணவர்கள் தேர்வுசெய்யபட்டனர்.

## கல்வி உதவித்தொகை வழங்குதல்



2018-19 கல்வியாண்டிற்கான இரண்டாம் பகுதி கல்வி உதவித்தொகை வழங்கும் நிகழ்ச்சி கடந்த ஏப்ரல் 16 அன்று வேலூர் விஐடி வளாகத்தில் உள்ள அண்ணா அரங்கத்தில் நடைபெற்றது. இந்த விழாவில் விஐடி வேந்தரும் அறக்கட்டளைத் தலைவருமான கல்விக்கோ. டாக்டர். கோ. விசுவநாதன் அவர்கள் தலைமை வகித்தார். நிகழ்வில் சிறப்பு விருந்தினராகச் சென்னை எஸ்.வி. குளோபல் மில்ஸ் குழுமத்தலைவர் திரு. எம். எத்திராஜ் அவர்கள் கலந்துகொண்டு மாணவர்களுக்குக் கல்வி உதவித்தொகை வழங்கிச் சிறப்புரையாற்றினார். விழாவில் 1,125 மாணவ மாணவிகளுக்கு 66 இலட்சம் கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டது.

## கல்வி உதவித்தொகை பெற விண்ணப்பங்கள் வழங்குதல்



"HEARTS" திட்டத்தின் கீழ் 2019-20 கல்வியாண்டிற்கான கல்வி உதவித்தொகை விண்ணப்பம் பெறுவதற்கான முகாம், வேலூர் மாவட்டத்தில் +2 தேர்ச்சிபெற்ற மாணவர்களுக்கு மாவட்டத்தின் 12 பகுதிகளில் மே 6 முதல் 14 வரை நடத்தியது. இம்முகாமில் உயர்கல்வி பற்றிய ஆலோசனைகள் மற்றும் 4,802 கல்வி உதவித்தொகை விண்ணப்பங்கள் மாணவர்களுக்கு வழங்கப்பட்டன.

## தகவல் தொழில்நுட்பத்திறன் மேம்பாட்டுப் பயிற்சி



அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளையும், தகவல் தொழில்நுட்பத்தில் முன்னணி நிறுவனமான சென்னையில் உள்ள ஆஸ்பயர் சிஸ்டமும் இணைந்து வேலூர் மாவட்டத்திலுள்ள பட்டதாரி மாணவர்களுக்குத் தகவல் தொழில்நுட்பத் துறையில் பயிற்சி அளித்து வேலைவாய்ப்பு வழங்குவதற்காகப் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளது. அதன்படி ஐந்தாவது பகுதி மாணவர்களுக்கு விஐடி வளாகத்தில் கடந்த ஜனவரி மாதம் முதல் ஜூன் மாதம் வரை ஆறு மாதம் பயிற்சி பெற்ற மாணவர்கள் மென்பொருள் பொறியாளர்களாகத் தகவல் தொழில்நுட்பத் துறையில் பணிபுரிகின்றனர்.

## கல்வி உதவித்தொகை பெற்றவர்: 5,147

- இவர்களில் 3,379 (65.66%) பெண்கள்
- 3,630 (70.05%) முதல் தலைமுறைப் பட்டதாரி மாணவர்கள்
- 4,794 (93.14%) கலை மற்றும் அறிவியல், பொறியியல் மற்றும் செவிலியர் படிப்பு படிக்கும் மாணவர்கள் அதிகமாக பயன் பெற்றிருக்கிறார்கள்
- 4,751 (92.31%) மாணவர்கள் அரசு/அரசு உதவிபெறும் மேல்நிலைப் பள்ளிகளில் பயின்றவர்கள்
- 15.65% தாய்/தந்தை இழந்த மாணவப் பயனாளிகள்
- 78.68% மாணவர்கள் +2 இல் 80% க்கும் குறைவான மதிப்பெண்கள் பெற்றவர்கள், அதிக மதிப்பெண்கள் பெற்றவர்கள் மட்டுமின்றி, குறைவான மதிப்பெண்கள் பெற்றவர்களுக்கும் அறக்கட்டளை, முக்கியத்துவம் அளித்து அவர்களின் பொருளாதாரச் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு உதவி வருகிறது
- இதுவரை 1,563 மாணவர்கள் இளங்கலை பட்டப்படிப்பை முடித்துள்ளார்கள், இதில் 605 மாணவர்கள் வேலை வாய்ப்புப் பெற்றுள்ளனர்
- 323 மாணவர்கள் முதுகலை படிப்புகளில் சேர்ந்து பயின்று வருகிறார்கள்




இந்த மகத்தான சேவையில் தாங்களும் பங்கு பெற்று தங்களது வீட்டில் நடக்கும் பிறந்தநாள், திருமணநாள் மற்ற இனிய நிகழ்வுகளின் மகிழ்ச்சியோடு அறக்கட்டளைக்கு நன்கொடை வழங்கி ஏழை மாணவர்களின் உயர்கல்விக்கு உதவலாம். இதன் மூலம் அவர்களின் வாழ்வில் ஒரு ஆக்கப்பூர்வமான மாற்றத்தை ஏற்படுத்தலாம்.

**தாங்கள் வழங்கும் நன்கொடைக்கு வருமானவரிச் சட்டம் 80G பிரிவின் கீழ் வரிவிலக்கு உண்டு.**

### முகவரி


திட்ட இயக்குநர்,
அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை,
அறை எண்:215, டாக்டர். எம்ஜிஆர். பிளாக்,
விஐடி வளாகம், வேலூர் - 632 014.
தமிழ்நாடு, இந்தியா.
தொலைபேசி : **0416 - 224 7777, 220 2196**


### வங்கி விவரம்

**Universal Higher Education Trust (UHET),**
A/C. No : 6063960011,
Indian Bank, VIT Branch,
Katpadi, Vellore Dt. - 632 014.
Swift Code : IDIBINBBTSY
IFSC Code : IDIB000V086

இசைபட வாழ்தல் ஈதலே என்பதை உணர்வோம்!
மகிழ்வித்து மகிழ்ந்திருப்போம்!